JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - PW- 10 Witness
for Prosecution

| CC. No. | 69/2021 | Crime No. | 310/2015 | Station | Appakoodal |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **Pw10 ரமேஷ்** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 18th day of February 2026. | | | |

**1 மற்றும் 2ம் எதிரி ஆஜர். 3ம் எதிரி, 6ம் எதிரி மற்றும் 7ம் எதிரி ஆஜர் இல்லை.**

**சாட்சி வீடியோ காணொளி மூலம் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது கோவை மாநகரம் காவல் கட்டுப்பாட்டு அறையில் உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன்.. நான் கடந்த 11.12.2015 ம் தேதி பவானி வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது, ஆப்பக்கூடல் காவல் உதவி ஆய்வாளர் அம்பிகா முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, புலன் விசாரணைக்காக என்னிடம் ஒப்படைத்த ஆப்பக்கூடல் காவல் நிலைய குற்ற எண்.310/2015, சட்டப்பிரிவுகள் 147, 294(b), 506(1), 406, 420 IPC வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருந்தார். மேற்படி வழக்கு கோப்பை புலன் விசாரணைக்காக எடுத்துக் கொண்ட நான் வழக்கின் சம்பவ இடமான அத்தாணி, செம்புலிச்சம்பாளையம், தேவர் தோட்டம் சென்று பார்க்க, வழக்கின் சாட்சியும் வாதியும் ஆன ஜெயக்குமார் எதிரிகளை அடையாளம் காட்ட 1ம் எதிரி ரமேஷ் குமார், மகேஷ், தங்கராஜ், சந்திரன், பாலதண்டபாணி ராஜேந்திரன் மற்றும் ராஜா தெக்கன் ஆகியோர்களை காவல் படுத்தி தக்க பாதுகாப்பில் வைத்து சம்பவ இடத்தை ஆஜர் சாட்சிகள் சத்தியசீலன் மற்றும் செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் 17:30 மணிக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மேற்படி மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.18 06:43:03 +0530

ஆஜர் சாட்சிகளான ஜெயக்குமார், ரங்கநாதன், ரவிக்குமார், சத்தியசீலன் மற்றும் செந்தில்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் விசாரணையில் இருந்தும், என்னுடைய தனிப்பட்ட விசாரணையில் இருந்தும் சம்பவம் நடைபெற்றது உண்மை எனத் தெரிய வந்ததால், மேற்படி எதிரிகளை கைது செய்வதற்கான காரணம் கூறி முறைப்படி இரவு 19.00 மணிக்கு கைது செய்தும், எதிரி ரமேஷ் குமாரிடமிருந்து TN 37 BJ 2273 என்ற பதிவு எண் கொண்ட வெள்ளை நிற Swift Car மற்றும் பணம் ரூ.23000/- ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் மூலம் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். எதிரி சந்திரன் என்பவரிடமிருந்து TN 36 P 8428 என்றபதிவு எண் கொண்ட சில்வர் கலர் Ford Car ஐ அதே சாட்சிகள் முன்னிலையில் 19.45 மணிக்கு கைப்பற்றுதல் மகசர்மூலம் கைப்பற்றினேன். எதிரிகள் மற்றும் கைப்பற்றப்பட்ட தடையை சொத்துகளுடன் நிலையம் வந்து எதிரிகளை தக்க காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கில் கைப்பற்றப்பட்ட தடையைச் சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். படிவம் 91 **அ.சா.ஆ.10 ஆக குறியிடு செய்யப்படுகிறது**.

TN 37 BJ 2273 Swift Car **அ.சா.பொ.2** ஆகவும், TN36 P 8428 பதிவு எண் கொண்ட சில்வர் கலர் Ford Car புகைப்படத்தின் வழியாக **அ.சா.பொ.3** ஆகவும் ( புகைப்படம் 5 எண்ணிக்கை) குறியிடு செய்யப்படுகிறது. பிறகு 28.12.2015 ஆம் தேதி சாட்சி துளசிதாஸ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 31.12.2015 ம் தேதி வாதி ஜெயக்குமாரின் வங்கி கணக்கு விவரம் கேட்டு கோவை சிட்டி யூனியன் வங்கிக்கு வேண்டுகோள் கடிதம் வைத்தேன். பிறகு 22.12.2015 ம் தேதியில் சாட்சி துளசிதாஸ் -ன் வங்கி கணக்கு கேட்டு கரூர் வைசியா வங்கிக்கு வேண்டுகோள் கடிதம் வைத்தேன். பிறகு 19.03.2016 ம் தேதி Kian Fin Service Private Limited நிறுவனத்தின் வங்கி விவரம் கேட்டு, கோவை கரூர் வைசியா வங்கி கிளையில், வேண்டுகோள் கடிதம் வைத்தேன். நான் பணி மாறுதல் காரணமாக வழக்கு கோப்பினை பவானி வட்ட காவல் ஆய்வாளர் திரு.இளங்கோ என்பவரிடம் ஒப்படைத்தேன்.

**1 மற்றும் 2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் தகவல் அறிக்கை மற்றும் வாதி கொடுத்த புகாரில் Kian Fin Serviceற்கு ரூ.45,00,000/- கொடுத்து ஏமாந்தது தான் வழக்கு என்றால், சரியல்ல. 1 மற்றும் 2ம்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.18 06:43:10 +0530

எதிரி புகார்தாரர் மற்றும் துளசிதாசை இருடியம் விற்பனை செய்யலாம் என நம்ப வைத்து Kian Fin Serviceக்கு பணம் அனுப்பி, பணம் எடுத்தது தான் புகார். புகார்தாரர் தனது புகாரில் டெல்லியில் உள்ள கியான் பின் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் என்ற கம்பெனியின் அக்கவுண்ட் உள்ள ஐசிஐசிஐ பேங்க்ற்கு செப்டம்பர் மாதம் இரண்டாவது வாரம் நான் ரூ.25,00,000/- ஐ சிட்டியூனியன் பேங்க் அவிநாசி ரோட்டில் உள்ள கோவை கிளை என்ற வங்கி மூலமும், என் நண்பரான துளசிதாஸ் ரூ.20,00,000/-ஐ கோவையில் உள்ள கேவிபி வங்கி மூலமும் அனுப்பி வைத்தோம் என்று புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். எனது விசாரணையில் கியான் பின் சர்வீஸ் லிமிடெட் எங்கு உள்ளது என்று நான் தெரிந்து கொண்டேனா என்றால், அது சம்பந்தமாக 19.03.2015 ம் தேதி கரூர் வைசியா கிளை மேலாளருக்கு வேண்டுகோள் கடிதம் வைத்தேன். மேற்படி கியான் பின் சர்வீஸ் டெல்லியில் உள்ளதாக தான் புகார்தாரர் தனது புகார் மற்றும் எனது விசாரணையில் கூறியுள்ளார் என்றால், சரிதான். நான் கரூர் வைசியா வங்கியில் வேண்டுகோள் கடிதம் கொடுத்தது தவிர கியான் பின் சர்வீஸ் தொடர்பாக எந்த புலன் விசாரணையும் மேற்கொள்ளவில்லை என்றால், சரியல்ல. நான் கியான் பின் சர்வீஸ் நிறுவனம் விசாரித்தது தொடர்பாக எந்த ஆவணம் நான் வைத்துள்ளேன் என்றால், புகார்தாரர் ஜெயக்குமார் மற்றும் சாட்சி துளசிதாஸ் ஆகியோர்களது வங்கி கணக்கில் இருந்து மேற்படி கியான் பின் சர்வீஸ் ற்கு அனுப்பப்பட்ட பணம் சம்பந்தமாக, சம்பந்தப்பட்ட வங்கிகளில் இருந்து விவரம் பெற்றேன். அதன் அடிப்படையில் கியான் பின் சர்வீஸ் நிறுவனம் தொடர்பாக கரூர் வைசியா வங்கியில் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். எனது விசாரணையில் நான் கரூர் வைசியா வங்கியில் கொடுத்த வேண்டுகோள் கடிதத்திற்கு கரூர் வைசியா வங்கியில் இருந்து ஏதாவது ஆவணம் எனக்கு கொடுத்தார்களா என்றால், கியான் பின் சர்வீஸ் நிறுவனம் தொடர்பாக எந்த ஆவணமும் எனக்கு கிடைக்கவில்லை. ஜெயக்குமார் மற்றும் சாட்சி துளசிதாசின் வங்கி பரிவர்த்தனை விவரம் மட்டும் தான் கிடைத்தது. இந்த வழக்கில் நான் கியான் பின் சர்வீஸ் நிறுவனத்தை சாட்சியாகவோ அல்லது எதிரியாகவோ சேர்க்கவில்லை என்றால், சரிதான்.

மேற்படி, சாட்சி ஜெயக்குமார் மற்றும் துளசிதாஸ் கோயம்புத்தூரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். மேற்படி சாட்சிகளின் பணம் அனுப்பியதாக சொல்லப்படும் வங்கிக் கணக்கும் கோயம்புத்தூரில் தான் உள்ளது என்றால், சரிதான். இந்த வழக்கில்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.18 06:43:18 +0530

எதிரிகளாக சேர்க்கப்பட்டுள்ள நபர்கள் அனைவரும் ஆப்பக்கூடலை சேர்ந்தவர்கள் அல்ல என்றால், எதிரிகளில் இருவர் கோபியைச் சார்ந்தவர்கள் மற்றும் ஒரு எதிரி தாளவாடி மற்றும் மூன்று நபர்கள் கோயமுத்தூரைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். பணம் அனுப்பப்பட்டதாக சொல்லப்படும் கியான் பின் சர்வீஸ் நிறுவனமானது டெல்லியைச் சார்ந்தது என்றால், புகார்தாரர் டெல்லியை சார்ந்தது என்று புகாரில் கூறியுள்ளார். ஆனால் அது குறித்து எனக்கு எந்த விவரமும் வங்கியிலிருந்து கிடைக்கவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமானது செம்புளிச்சாம்பாளையம், தேவர் தோட்டத்தை சேர்ந்தது என்றால், சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் உள்ள தேவர் தோட்டத்தின் உரிமையாளர் மற்றும் வேலையாட்களை நான் விசாரிக்கவில்லை என்றால், சரியல்ல. நான் தேவர் தோட்டத்தில் உள்ள எந்த சாட்சிகளை விசாரித்தேன் என்றால், சாட்சிகள் யாரும் இல்லை.

மேற்படி தேவர் தோட்டத்தில் சாட்சிகள் யாரும் இல்லை என்று நான் எதிலும் கூறவில்லை என்றால், சரிதான். நான் சம்பவ இடம் சென்று தயாரித்ததாக சொல்லப்படும் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் கைப்பற்றியதாக சொல்லப்படும் வாகனம் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். நான் முதலில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேனா அல்லது கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தேனா என்றால், முதலில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து முதலில் தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் நான் கைப்பற்றிய வாகனம் எதுவும் காட்டவில்லை என்றால், சரிதான். நான் எதிரிகளிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால், சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லை. இந்த வழக்கின் புகார்தாரர் 1 மற்றும் 2ம் எதிரிகள் தவிர மற்ற எதிரிகள் என்னுடன் வந்தவர்கள் என்றும், அவர்களுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும், பிணை வழங்க ஆட்சேயபனை இல்லை என்றும் கொடுத்த பிரமாண பத்திரத்தை நான் தெரிந்து கொண்டேனா என்றால், அதை பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கின் புகார்தாரர் எனது புலன் விசாரணையில் மேற்படி நபர்கள் ஏழு பேரும் ஒன்று சேர்ந்து கொண்டு என்னையும், என் கூட வந்தவர்களையும் பார்த்து ஏன்டா தேவிடியா பசங்களா, கண்டாரோலி பசங்களா, நீங்க என்ன பெரிய இவங்களாடா, நீங்க அனுப்பிய பணத்தை எல்லாம் தர முடியாது என்று சத்தம் போட்டு பயங்கரமாக தகராறு செய்தார்கள்.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.18 06:43:27 +0530

பணத்தை இனிமேல் எங்ககிட்ட கேட்டீங்கன்னா கோயம்புத்தூருக்கு உயிரோடு போக மாட்டீர்கள் என்று அவர்கள் எல்லோரும் சேர்ந்து கொலை மிரட்டல் செய்தார்கள் என்று கூறியுள்ளார் என்றால், சரிதான். மேலும் இந்த வழக்கின் புகார்தாரர் எனது புலன் விசாரணையின்  போது என்னிடம் தகராறு செய்த ஏழு நபர்களை நான் காட்டுகிறேன் என்று தான் கூறியுள்ளார் என்றால்,  சரிதான்.

மேற்படி, புகார்தாரர் எனது விசாரணையின் போது, எதிரி மகேஷ் சிட்டி யூனியன் வங்கிக்கு வந்தார் என்று கூறியுள்ளாரா என்றால், சரிதான். இரண்டு நபர்கள் வந்ததாக கூறியுள்ளார். எதிரிகள் இந்த வழக்கின் புகார்தாரருடன் சிட்டி யூனியன் வங்கிக்கு சென்றது குறித்து அங்குள்ள சிசிடிவி பதிவுகள் எதுவும் கைப்பற்றி இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சிசிடிவி பதிவுகள் எதுவும் கிடைக்கவில்லை. அ.சா.2 ரவிக்குமார் எனது விசாரணையின் போது நான் செம்புளிச்சாம்பாளையம் சென்றிருந்தபோது எதிரிகள் ராஜேந்திரன், ராஜாதெக்கன் மற்றும்  பாலதண்டபாணி எங்களுடன் கூட வந்தார்கள் என்று  கூறியுள்ளாரா என்றால், கூறவில்லை. சம்பவ இடம் சென்ற பின்பு ரமேஷ் குமார் மற்றும் மகேஷ் வந்ததாக சொன்னார். ரங்கநாதன் எனது  விசாரணையின் போது எதிரிகள் தேவர் தோட்டத்திற்கு வருவது குறித்து சந்திரன் சொன்னதாக சொல்லவில்லை என்றால், சரிதான்.

மேலும், எனது விசாரணையின் போது ரங்கநாதன் மேற்படி ஏழு நபர்களுடன் ஒன்று சேர்ந்து கொண்டு ஜெயக்குமாரையும், அவர்களுடன் வந்த எங்களையும் பார்த்து, ஏன்டா தேவிடியா பசங்களா, கண்டாரோலி பசங்களா,  நீங்க என்ன பெரிய இவங்களாடா, நீங்க அனுப்பிய பணத்தை எல்லாம் தர முடியாது என்று சத்தம் போட்டு பயங்கரமாக தகராறு செய்தார்கள் என்று கூறியுள்ளார் என்றால், சரிதான்.  துளசிதாசை நான் காவல் நிலையம் அழைத்து விசாரித்தேனா அல்லது நான் கோயம்புத்தூர் சென்று விசாரித்தேனா என்றால், காவல் நிலையம் அழைத்து விசாரித்தேன். சம்பவ தினத்தன்று நான் துளசிதாசை விசாரிக்கவில்லை என்றால், சரிதான். சம்பவத்திற்கு பின்னிட்டு துளசிதாசை விசாரிக்க நான்  அழைப்பாணை எதுவும் கொடுக்கவில்லை என்றால், சரிதான். துளசிதாசும் ரூ.20,00,000/-  ஐ வங்கியில் செலுத்தி ஏமாந்ததாக தான் வழக்கில் சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். சம்பவ இடத்திற்கு ஜெயக்குமாருடன் துளசிதாஸ் வரவில்லை என்றால், சரிதான். துளசிதாஸ் எனது விசாரணையின் போது 1 மற்றும் 2ம் எதிரிகளை சந்திரன் மூலம் தெரியும் என்கிற விவரத்தை கூறவில்லை

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.18 06:43:34 +0530

என்றால், சரிதான். துளசிதாஸ் எனது விசாரணையில் 07.09.2015 ஆம் தேதி பணம் அனுப்பிவிட்டு 09.09.2015ஆம் தேதி அன்னூர் மேட்டுப்பாளையம் ரோட்டில் எதிரிகளை பார்க்க அங்கு சென்றபோது, அங்கு எதிரிகள் இல்லை என்கிற விவரத்தை எனது விசாரணையில் கூறவில்லை என்றால், சரியல்ல. அவர் இருந்ததாக சொல்லியுள்ளார். நான் சொல்வது தவறு என்றாலும், நான் சொல்வது போல் ஆவணங்கள் எதுவும் தயார் செய்யவில்லை என்றாலும், எந்த ஆவணமும் கைப்பற்றவில்லை என்றாலும், எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும், சரியல்ல.

மேலும, இந்த வழக்கானது ஆப்பக்கூடல் காவல் நிலைய எல்லைக்குள் வராது என்றாலும், ஏதோ ஒரு அழுத்தத்தின் காரணமாக, சட்டத்திற்கு மாறாக ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. 1 மற்றும் 2ம் எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும், சம்பந்தமில்லை என்றாலும், துளசிதாஸ் மற்றும் செல்வகுமார் ஆகியோரின் அறிவுறுத்தலின் பேரில் இந்த வழக்கின் புகார்தாரர் கியான் பின் சர்வீஸிற்கு பணம் அனுப்பி ஏமாந்துள்ளார் என்றால், சரியல்ல. அதன் காரணமாகத்தான் துளசிதாஸ், ஜெயக்குமாருடன் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றால், சரியல்ல. அதன் காரணமாகத்தான் துளசிதாஸ் தனிப்பட்ட புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல. இந்த வழக்கின் உண்மையான எதிரி கியான் பின் சர்வீஸ் நிறுவனம் என்றாலும், நான் ஏதோ ஒரு காரணத்திற்காக கியான் பின் சர்வீஸ் நிறுவனத்தின் மீது வழக்கு எதுவும் பதிவு செய்யாமல் எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

மேலும், இந்த வழக்கு விவரங்கள் தவறாக இருப்பதால்தான் அ.கா.1 ஜெயக்குமார் மனு தாக்கல் செய்துள்ளார் என்றால், சரியல்ல. நான் சொல்வது தவறு என்றாலும், நான் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும், வாக்குமூலங்கள் எதுவும் பெறவில்லை என்றாலும், அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றாலும், சரியல்ல.

**3,6 மற்றும் 7ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

3, 6 மற்றும் 7ம் எதிரிகள் ஜெயக்குமாருடன் கூட வந்தவர்கள் என்றாலும், ஜெயக்குமாரை திட்ட எந்த அவசியமும் இல்லை என்றாலும், சரியல்ல.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.18 06:43:40 +0530

**நீதிமன்ற கேள்வி**

1. சாட்சிகள்  ஜெயக்குமார் மற்றும் துளசிதாஸ் அனுப்பிய கியான் பின் சர்வீஸிற்கு அனுப்பிய பணம் தொடர்பாக நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் ?

நான் மேற்படி வங்கி தொடர்பாக கரூர் வைசியா வங்கியில் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன்.

2. மேற்படி கியான் பின் சர்வீஸ் நிறுவனத்தின் வங்கி கணக்கை முடக்க  (Freeze) எந்த முயற்சியும்  நீங்கள்  செய்யவில்லையா என்றால்?

கியான் பின் சர்வீஸ் நிறுவனம் தொடர்பாக எந்த ஆவணமும் எனக்கு கிடைக்கவில்லை.

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.18 06:43:46 +0530

Sd/– (J.RAJKUMAR)

Judicial Magistrate No.1, Bhavani